## உசிலம்பட்டி நகராட்சி மன்றம்
## நகர்மன்ற சாதாரணக்கூட்டம்
## நாள். 30.06.2023 வெள்ளிக்கிழமை நேரம் – காலை 11.00 மணி

---

**மன்றப்பொருள்–1**

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, மாவட்ட அரசிதழ் எண்.124, நாள். 12.04.2023–இன்படி நகர்ப்புற உள்ளாட்சி அமைப்பு விதிகள் 2023 புதியதாக அமல்படுத்தப்பட்டது. மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு**

மன்றம் பதிவு செய்யலாம்.

(ந.க.எண்.1135/2023/சி1)

**தீர்மானம் எண்.441**

**தீர்மானம் : அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

---

**மன்றப்பொருள்–2**

உசிலம்பட்டி நகராட்சி தற்போதைய பேருந்து நிலையத்தினை மறுகட்டமைப்பு செய்வதற்கான பணிகள் மேற்கொள்வதற்கு தொடர் நடவடிக்கையில் இருந்து வருகிறது. இப்பேருந்து நிலைய கட்டுமான பணி காலத்தில் உள்ளூர் மற்றும் வெளியூர் பயணிகள் பேருந்தில் பயணிக்கும் வகையில் தற்காலிக பேருந்து நிலையம் அமைத்திட தமிழ்நாடு வீட்டுவசதி வாரிய அரசு குடியிருப்பு பகுதியில் நகர்மன்ற தலைவர், நகர்மன்ற துணைத்தலைவர், ஆணையாளர் (ம) பொறியாளர் முன்னிலையில் இடம் தேர்வு செய்ப்பட்டது.

உசிலம்பட்டி நகர்ப்பகுதிக்கு தற்காலிக பேருந்து நிலையம் செயல்படுத்துவதற்கு தேவையான அடிப்படை கட்டமைப்பில் ஒன்றான கழிப்பறை அமைப்பதற்கு அறிவுறுத்தப்பட்டது.

அதன்படி தற்காலிக பேருந்து நிலையம் அமைய உள்ள இடத்தில் பெண்கள் மற்றும் ஆண்கள் பொது கழிப்பறை ( 2 Seat) மற்றும் யூரினல் கட்டுவதற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டமைக்கு ரூ. 5.50 இலட்சத்திற்கு பணி மேற்கொள்ள மற்றும் பணியினை வருவாய் நிதியில் இருந்து மேற்கொள்வதற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு**

1). மன்றம் அனுமதி வழங்கலாம்.

2). நகர்மன்ற முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரி பணி மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண். 1128/2023/இ1)

**தீர்மானம் எண்.442**

**தீர்மானம் : அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

---

**மன்றப்பொருள்–3**

உசிலம்பட்டி நகராட்சி தற்போதைய பேருந்து நிலையத்தினை மறுகட்டமைப்பு செய்வதற்கான பணிகள் மேற்கொள்வதற்கு தொடர் நடவடிக்கையில் இருந்து வருகிறது. இப்பேருந்து நிலைய கட்டுமானப்பணி காலத்தில் உள்ளூர் மற்றும் வெளியூர் பயணிகள் பேருந்தில் பயணிக்கும் வகையில் தற்காலிக பேருந்து நிலையம் அமைத்திட தமிழ்நாடு வீட்டு வசதி வாரிய அரசு குடியிருப்பு பகுதியில் நகர்மன்ற தலைவர், நகர்மன்ற துணைத்தலைவர், ஆணையாளர் (ம) பொறியாளர் முன்னிலையில் இடம் தேர்வு செய்து அனுமதி வழங்கக்கோரி

இவ்வலுவலக கடிதம் ந.க.எண். 208/2023/அ1, நாள். 26.04.2023–இல் அனுமதி கோரி தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம் மதுரை கடிதம் அனுப்பப்பட்டு அனுமதி பெறப்பட்டது.

உசிலம்பட்டி நகர்ப்பகுதிக்கு தற்காலிக பேருந்து நிலையம் செயல்படுத்துவதற்கு தேவையான அடிப்படை கட்டமைப்பில் ஒன்றான பொது மக்கள் மற்றும் பேருந்து நிலைய பயணிகள் பயனடையும் வகையில் தற்காலிக அம்மா உணவகம் கட்டுவதற்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ. 8.00/– இலட்சம் ஆகும். இப்பணியினை வருவாய் நிதியில் இருந்து மேற்கொள்வதற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலகக்குறிப்பு</u>

1). மன்றம் அனுமதி வழங்கலாம்.

2). நகர்மன்ற முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரி பணி மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண். 1129/2023/இ1)

**தீர்மானம் எண்.443**

**தீர்மானம் : அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

---

<u>மன்றப்பொருள்–4</u>

உசிலம்பட்டி நகராட்சி தற்போதைய பேருந்து நிலையத்தினை மறுகட்டமைப்பு செய்வதற்கான பணிகள் மேற்கொள்வதற்கு தொடர் நடவடிக்கையில் இருந்து வருகிறது. இப்பேருந்து நிலைய கட்டுமானப்பணி காலத்தில் உள்ளூர் மற்றும் வெளியூர் பயணிகள் பேருந்தில் பயணிக்கும் வகையில் தற்காலிக பேருந்து நிலையம் அமைத்திட தமிழ்நாடு வீட்டுவசதி வாரிய அரசு குடியிருப்பு பகுதியில் நகர்மன்ற தலைவர், நகர்மன்ற துணைத்தலைவர், ஆணையாளர் (ம) பொறியாளர் முன்னிலையில் இடம் தேர்வு செய்யப்பட்டது.

உசிலம்பட்டி நகர்ப்பகுதிக்கு தற்காலிக பேருந்து நியைத்தினை செயல்படுத்துவதற்கு தமிழ்நாடு வீட்டு வசதி வாரிய அரசு குடியிருப்பு பகுதியினை சுத்தம் செய்து மேடு பள்ளமுமாக உள்ள இடத்தினை தற்காலிக பேருந்து நிலையம் அமைப்பதற்கு தகுந்தவாறு ஜே.சி.பி. வாகனம் மூலம் சமன்படுத்தி காலி இடத்தினை தயார் செய்து தருவதற்கான தயார் செய்யப்பட்டமைக்கான உத்தேச மதிப்பீடு ரூ. 6.00/– இலட்சத்திற்கு பணி மேற்கொள்ள மற்றும் பணியினை வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்வதற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலகக்குறிப்பு</u>

1). மன்றம் அனுமதி வழங்கலாம்.

2). நகர்மன்ற முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரி பணி மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண். 1130/2023/இ1)

**தீர்மானம் எண்.444**

**தீர்மானம் : அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

---

<u>மன்றப்பொருள்–5</u>

உசிலம்பட்டி நகராட்சி தற்போதைய பேருந்து நிலையத்தினை மறுகட்டமைப்பு செய்வதற்கான பணிகள் மேற்கொள்வதற்கு தொடர் நடவடிக்கையில் இருந்து வருகிறது. இப்பேருந்து நிலைய கட்டுமானப்பணி காலத்தில் உள்ளூர் மற்றும் வெளியூர் பயணிகள் பேருந்தில் பயணிக்கும் வகையில் தற்காலிக பேருந்து நிலையம் அமைத்திட தமிழ்நாடு வீட்டுவசதி வாரிய அரசு குடியிருப்பு பகுதியில் நகர்மன்ற தலைவர், நகர்மன்ற

துணைத்தலைவர், ஆணையாளர் (ம) பொறியாளர் முன்னிலையில் இடம் தேர்வு செய்யப்பட்டது.

உசிலம்பட்டி நகர்ப்பகுதிக்கு தற்காலிக பேருந்து நியைத்தினை செயல்படுத்துவதற்கு தேவையான அடிப்படை கட்டமைப்பில் ஒன்றான பொது மக்கள் மற்றும் பேருந்து நிலைய பயணிகள் பயனடையும் வகையில் அதன்படி தற்காலிக பேருந்து நிலையம் அமைய உள்ள இடத்தில் தண்ணீர் வசதி மற்றும் பைப்லைன் வசதி ஏற்படுத்தி தருவதற்கான மதிப்பீடு தயார் செய்யப்பட்டமைக்கு ரூ. 2.00/- இலட்சத்திற்கு பணி மேற்கொள்ள மற்றும் பணியினை வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்வதற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலகக்குறிப்பு</u>

1). மன்றம் அனுமதி வழங்கலாம்.

2). நகர்மன்ற முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரி பணி மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண். 1132/2023/இ1)

**தீர்மானம் எண்.445**

**தீர்மானம் : அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

---

<u>மன்றப்பொருள்-6</u>

உசிலம்பட்டி நகராட்சி நாடாளுமன்ற உறுப்பினர் உள்ளூர் தொகுதி மேம்பாட்டுத்திட்டம் 2022-2023-ஆம் ஆண்டு நிதி ஒதுக்கீட்டின்கீழ் தேனி மாவட்டத்தினை பற்று மாவட்டமாக கொண்ட நாடாளுமன்ற உறுப்பினர் அவர்கள் பரிந்துரை செய்யப்பட்ட 2 பணிகளுக்கு கூடுதல் ஆட்சியர் (வ) திட்ட இயக்குநர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை அவர்களின் ந.க.எண். 927/2023/டி2, நாள். 16.06.2023 கடிதத்தில் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மன்றத்தின் பார்வைக்கு.

| வ.எண். | பணிகளின் விபரம் | மதிப்பீடு ரூ. இலட்சத்தில் |
|---|---|---|
| 1 | வார்டு-1 மாமரத்துப்பட்டியில் மேல்நிலை நீர்த்தேக்கத்தொட்டி கட்டுதல் மற்றும் பைப்லைன் அமைத்தல் பணி | 18,00,000 |
| 2 | வார்டு-10 ஆதிதிராவிடர் காலனியில் சமுதாயக்கூடம் கட்டுதல் | 20,00,000 |
| | மொத்தம் | 38,00,000 |

<u>அலுவலகக்குறிப்பு</u>

மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

(ந.க.எண். 725/2023/இ1)

**தீர்மானம் எண்.446**

**தீர்மானம் : அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

---

<u>மன்றப்பொருள்-7</u>

நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண். 16495/2023/CFC1, நாள். 29.05.2023-இன் கடிதத்தில் மாண்புமிகு. நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் அவர்களின் தமிழ்நாடு சட்டமன்ற அறிவிப்பு 2023-24 நாள். 30.03.2023 அறிவிப்பு எண்.8-இல் பழைய தகன மேடைகளை நவீன எரிவாயு தகன மேடையாக மாற்றப்படும் என அறிவுறுத்துள்ளபடி உசிலம்பட்டி நகராட்சிக்கான வார்டு-22 பேரையூர் ரோடு மயானத்தில் அமையப்பெற்றுள்ள எரிவாயு தகன மேடையினை 15-வது மத்திய நிதிக்குழு 2023-2024-ஆம் ஆண்டு Unitied Grant-ன் ரூ. 31.40 இலட்சம் மதிப்பீட்டில் திரவ எரிவாயு தகன மேடையாக மாற்றம் செய்வதற்கு அனுமதி

வழங்கப்பட்டதனை தொடர்ந்து இப்பணிக்கு 16.06.2023–ஆம் தேதி Online மூலம் இரு உறை முறையில் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் மூன்று ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றது. விபரம் பின்வருமாறு 1. M/s. Pearls Engineering Works, Madurai. 2. SGS Services, Chennai. 3. Vishnu Fabrication & Designing Works, Ambatur இதற்கான தொழில்நுட்ப தகுதிகாண் ஒப்பந்தப்புள்ளியில் சீராய்வு மேற்கொள்ளப்பட்டதில் M/s. Pearls Engineering Works ஒப்பந்ததாரரின் தொழில்நுட்ப தகுதிகாண் நிபந்தனைகளை நிறைவு செய்வதால் அன்னாரது விலைவிகித ஒப்பந்தப்புள்ளி 21.06.2023–இல் திறக்கப்பட்டது விபரம் பின்வருமாறு.

| | |
|---|---|
| M/s. Pearls Engineering Works ஒப்பந்ததாரர், மதுரை. | மதிப்பீட்டு விலைவிகிதத்தை காட்டிலும் சதவிகிதம் குறைவு |

எனவே, மேற்காணும் பணிக்கு மதிப்பீட்டை காட்டிலும் குறைவாக ஒப்பந்தப்புள்ளி வழங்கிஹுயுள்ள M/s. Pearls Engineering Works நிறுவனம் மூலம் பணி மேற்கொள்வதற்கு மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

<u>அலுவலகக்குறிப்பு</u>

1). மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

2). நகர்மன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று தொடர் நடவடிக்கை மேற்கொண்டதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

(ந.க.எண். 947/2023/இ1)

**தீர்மானம் எண்.447**

**தீர்மானம் : அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

---

<u>மன்றப்பொருள்–8</u>

உசிலம்பட்டி நகராட்சியில் வார்டு–24 பகுதியில் அமைந்துள்ள பெருமாள் கோவில் முதல் மயானம் வரை உள்ள ஓடை பகுதியினை சுத்தம் செய்து கரையமைத்தல் பணி மேற்கொள்ளவும், அதனருகே அமைந்துள்ள மயானம் பகுதி மிகவும் (5 அடி) பள்ளமுமாக இருப்பதால் மழைக்காலங்களில் ஓடையிலிருந்து வரும் தண்ணீர் தேங்கி பொதுமக்கள் ஈமச்சடங்கு காரியம் செய்வதில் சிரமம் ஏற்படுவதால் 5 அடி பள்ளமாக உள்ள மயானத்தினை மண் அடித்து சமன்படுத்திடவும் மற்றும் அருகே உள்ள ஊரணியினை தூர்வாறி அதனை சுற்றி கரை அமைத்து பொதுமக்கள் நடந்து செல்ல ஏதுவாக பாதை அமைத்து கொடுக்கும் பணியினை ரூ. 20.00 இலட்சம் மதிப்பீட்டில் வருவாய் நிதியில் மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலகக்குறிப்பு</u>

மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண். 1133/2023/இ1)

**தீர்மானம் எண்.448**

**தீர்மானம் : அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

---

<u>மன்றப்பொருள்–9</u>

உசிலம்பட்டி நகராட்சியில் வார்டு–14, அரசு கள்ளர் ஆரம்பபள்ளி, கருக்கட்டான்பட்டி அமைந்துள்ள ஒருங்கிணைந்த சமையற்கூடத்தில் காலை சிற்றுண்டி தயார் செய்து

1).வார்டு–14 அரசு கள்ளர் ஆரம்பப்பள்ளி, கருக்கட்டான்பட்டி

2).வார்டு–12, பஞ்சாயத்து யூனியன் பள்ளி, உசிலம்பட்டி

3).வார்டு–24, அரசு கள்ளர் ஆரம்பப்பள்ளி, கவண்டன்பட்டி

ஆகிய மூன்று பள்ளிகளிலும் பயிலும் 1 முதல் 5–ஆம் வகுப்பு வரை உள்ள மாணவர்களுக்கு சிற்றுண்டி விநியோகம் செய்திடும் பணிக்கு கரிஷ்மா டிரேடர்ஸ், மதுரை

நிறுவனம் நபர் ஒன்றுக்கு ரூ. 12.70/- இலட்சத்திற்கு சிற்றுண்டி வழங்கிட குறைவான விலைப்புள்ளி கொடுத்துள்ளனர். வைப்புத்தொகை 2% செலுத்திய பிறகு வேலை உத்தரவு வழங்கிட மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு**

1).மன்றம் அனுமதி வழங்கலாம்.

2).நகர்மன்ற முன் அனுமதி பெற்று வேலை உத்தரவு வழங்கியதையும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண். 957/2023/இ1)

**தீர்மானம் எண்.449**

**தீர்மானம் : அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

---

**மன்றப்பொருள்-10**

நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் செயல்முறைகள் ந.க.எண். 3096/2022/பி2, நாள். 25.05.2023-இன் கடிதத்தில் 15-வது மத்திய நிதிக்குழு பரிந்துரையில் பேரிலான பிணை மான்யத்திட்டம் (Tied Grant) நிதியிலிருந்து கீழ்க்கண்ட பணிகளுக்கு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மன்றத்தின் பார்வைக்கு

| வ.எண். | பணியின் விபரம் | மதிப்பீடு ரூ. இலட்சத்தில் |
|---|---|---|
| Tied Grant 2022-23 (குடிநீர் பணிகள்) | | |
| 1 | வார்டு-12 பேருந்து நிலைய எல்கை கிழக்கு பகுதியில் அமைந்துள்ள குடிநீர் மேல்நிலை நீர்த்தேக்கத்தொட்டி மராமத்து செய்யும் பணிகள் | 18.00 |
| | மொத்தம் | 18.00 |
| Tied Grant 2022-23 (திடக்கழிவு மேலாண்மை பணிகள்) | | |
| 1 | வார்டு-22 பேரையூர் ரோடு - MCC-இல் Fresh Waste (காய்கறி கழிவுகள்) அரைக்கும் அரவை இயந்திரம் (Shredding Machine) கொள்முதல் செய்யும் பணி | 4.00 |
| 2 | வார்டு-24 கவண்டன்பட்டியில் அமைந்துள்ள கழிப்பறையில் மராமத்து செய்யும் பணிகள் | 7.00 |
| 3 | வார்டு-12 முருகன்கோவில் தெருவில் அமைந்துள்ள ஆடுவதை செய்யும் கூடத்தில் மராமத்து செய்யும் பணிகள் | 7.00 |
| | மொத்தம் | 18.00 |
| | ஆக மொத்தம் | 36.00 |

**அலுவலகக்குறிப்பு**

1).மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

2).நகர்மன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று தொடர் நடவடிக்கை மேற்கொண்டதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

(ந.க.எண். 1234/2023/இ1)

**தீர்மானம் எண்.450**

**தீர்மானம் : அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

---

**மன்றப்பொருள்-11**

உசிலம்பட்டி நகராட்சி தற்போதைய பேருந்து நிலையத்தினை மறு கட்டமைப்பு செய்வதற்கான பணிகள் மேற்கொள்வதற்கு தொடர் நடவடிக்கையில் இருந்து வருகிறது. இப்பேருந்து நிலைய கட்டுமான பணி காலத்தில் உள்ளூர் மற்றும் வெளியூர் பயணிகள் பேருந்தில் பயணிக்கும் வகையில் தற்காலிக பேருந்து நிலையம் அமைத்திட தமிழ்நாடு

வீட்டுவசதி வாரிய அரசு குடியிருப்பு பகுதியில் நகர்மன்ற தலைவர், நகர்மன்ற துணைத்தலைவர், ஆணையாளர் (ம) பொறியாளர் முன்னிலையில் இடம் தேர்வு செய்யப்பட்டது.

உசிலம்பட்டி நகர்பகுதிக்கு தற்காலிக பேருந்து நிலையம் செயல்படுத்துவதற்கு தேவையான அடிப்படை கட்டமைப்பில் ஒன்றான சாலை அமைப்பதற்கு அறிவுறுத்தப்பட்டது.

அதன்படி தற்காலிக பேருந்து நிலையம் அமைய உள்ள இடத்தில் பொதுமக்கள் மற்றும் பேருந்துகள் வந்து செல்வதற்கும் பேருந்துகளை நிறுத்துவதற்கு கிராவல் அமைத்து WMM சாலை அமைப்பதற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டமைக்கு ரூ. 15.00/– இலட்சத்திற்கு பணி மேற்கொள்ள மற்றும் பணியினை வருவாய் நிதியில் இருந்து மேற்கொள்வதற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலகக்குறிப்பு</u>

1). மன்றம் அனுமதி வழங்கலாம்.

2).நகர்மன்ற தலைவரின் முன் அனுமதி ஒப்பந்தப்புள்ளி கோரி பணி மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண். 1131/2023/இ1)

**தீர்மானம் எண்.451**

**தீர்மானம் : அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

---

<u>மன்றப்பொருள்–12</u>

தலைமை பொறியாளர் நகராட்சி நிர்வாக ஆணையரகம், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண். 29045/2019/டிஒ.2, நாள். 24.01.2020 மற்றும் 01.06.2022 அவர்களின் கடிதத்தில் உள்ள 1460 எண்ணிக்கை தெருவிளக்குகளை LED விளக்குகளாக மாற்றம் செய்வதற்கும் (மற்றும்) 1430 புதிய LED தெருவிளக்குகள் பொருத்துவதற்கும் அனுமதி வழங்கப்பட்டு 28.12.2022–இல் ஒப்பந்தப்புள்ளி கோரி 08.02.2023–இல் வேலை உத்தரவு வழங்கப்பட்டு அளவீடு செய்யும் பணி நடைபெற்று வருகின்றது.

உசிலம்பட்டி நகராட்சி அனைத்து வார்டு பகுதிகளிலும் தெருவிளக்கு மாற்றி அமைத்தல் (ம) புதிய தெருவிளக்குகள் அமைத்தல் பணியினை மேற்கொள்ளும் வரை தற்போதைய தெருவிளக்குகளை நல்ல நிலையில் தொடர்ந்து பராமரித்து வரவேண்டியது அவசியமாகிறது. இதன் பொருட்டு பொதுமக்கள் நலன் கருதி தற்போதைய தெருவிளக்குகள் பராமரிப்பு பணி மேற்கொள்ள உத்தேச மதிபீடு ரூ. 9.90/– இலட்சத்திற்கு பணி மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலகக்குறிப்பு</u>

மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண். 1134/2023/இ1)

**தீர்மானம் எண்.452**

**தீர்மானம் : அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

---

<u>மன்றப்பொருள்–13</u>

உசிலம்பட்டி நகாட்சி வார்டு–1 மாமரத்துப்பட்டியில் அமைந்துள்ள சோலைநகர் 1–வது, 2–வது மற்றும் 3–வது தெரு தேனி ரோடு நாஞ்சில்நகர், அப்துல்கலாம் தெரு, விநாயகர் கோவில் தெரு, குப்பை மேட்டு தெரு பகுதியில் வசிக்கும் பொதுமக்கள் தெருமின் விளக்குகள் இல்லாமல் அதிக சிரமத்தினை ஏற்படுத்துவதாகவும், மழைக்காலங்களில் சிறியோர் முதல் பெரியவர் வரை இரவில் நடந்து செல்லவும், பள்ளி குழந்தைகள் படிப்பதற்கும் மிகவும் சிரமமாக உள்ளதாக கோரிக்கை விடுத்ததன் பேரில் மேற்படி தெரு பகுதியில் புதிய தெருவிளக்குகள் ரூ. 5.00/– இலட்சம் உத்தேச மதிப்பீட்டில் அமைப்பதற்கு நகர்மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலகக்குறிப்பு</u>**

மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண். 1119/2023/இ1)

**தீர்மானம் எண்.453**

**தீர்மானம் : அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

---

**<u>மன்றப்பொருள்–14</u>**

உசிலம்பட்டி நகராட்சியில் 2023–2024–ஆம் ஆண்டிற்கான பொதுநிதியின்கீழ் 16.06.2023 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில் வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும்.

| வ.எ. | வேலையின் பெயர் | மதிப்பீடு தொகை ரூ. இலட்சத்தில் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்புநோக்கு பட்டியலின்படி |
|---|---|---|---|---|
| 1 | 1 முதல் 24 வார்டு வரையிலும் உள்ள அனைத்து பகுதிகளிலும் குடிநீர் பகிர்மான குழாய் பழுது நீக்கம் செய்யும் பணி | 5.00 | திரு.எஸ்.ஈஸ்வரன் | 0.02% குறைவு |
| | | | M/s.சீத்தாராமதாசன் அன் கோ | 0.76% அதிகம் |
| 2 | வார்டு–03 அன்னம்பாரிபட்டியில் பைப்லைன் அமைத்தல் பணி | 4.00 | திரு.எஸ்.ஈஸ்வரன் | 0.01% குறைவு |
| | | | M/s.சீத்தாராமதாசன் அன் கோ | 1.72% அதிகம் |
| 3 | வார்டு–13 கருக்கட்டான்பட்டியில் ஆழ்துளை கிணறுடன் கூடிய சின்டெக்ஸ் டேங்க் அமைத்தல் பணி | 5.00 | திரு.எஸ்.ஈஸ்வரன் | 0.32% குறைவு |
| | | | M/s.சீத்தாராமதாசன் அன் கோ | 0.38% அதிகம் |
| 4 | வார்டு–10 முத்துகிருஷ்ண ஆசாரி தெருவில் சின்டெக்ஸ் மற்றும் பைப்லைன் அமைத்தல் பணி | 5.00 | திரு.எஸ்.ஈஸ்வரன் | 0.02% குறைவு |
| | | | M/s.சீத்தாராமதாசன் அன் கோ | 0.30% அதிகம் |
| 5 | இருளாயி அம்மாள் தெருவில் சின்டெக்ஸ் டேங்குடன் கூடிய பைப்லைன் அமைத்தல் பணி | 3.50 | திரு.எஸ்.ஈஸ்வரன் | 0.01% குறைவு |
| | | | M/s.சீத்தாராமதாசன் அன் கோ | 1.69% அதிகம் |
| 6 | உசிலம்பட்டி நகராட்சி அலுவலகத்தில் மேஜை நாற்காலி கொள்முதல் செய்யும் பணி | 7.00 | திண்டுக்கல் லாக் ஹார்டுவேர் அன்ட் ஸ்டீல் பர்னிச்சர்ஸ் மொர்க்ஸ் இன்டஸ்ட்ரீஸ் கோ.சொசைட்டி | 0.02% குறைவு |
| | | | சாஸ்தா பர்னிச்சர்ஸ் வொர்க்ஸ் | 2.94% அதிகம் |
| 7 | வார்டு–22 பேரையூர் ரோடு உரக்கிடங்கில் அமையப்பெற்ற கேஸ் பிளாண்ட்க்கு மேற்கூரை அமைத்தல் பணி | 12.00 | திரு. ஜெ.சிவப்பிரகாசம் | 0.01% குறைவு |
| | | | நந்தினி கன்ஸ்ட்ரக்சன் | 2.23% அதிகம் |
| 8 | குடிநீர் வால்வு திறந்து மூடுவதற்கு குடிநீர் மேல்நிலைத் தொட்டி சுத்தம் செய்வது மற்றும் பாதுகாத்தல் எஸ்.மேட்டுப்பட்டி தலைமை நீரேற்று நிலைய மின்மோட்டார் இயக்குதல் பணி மற்றும் மின் பணிகள் | 20.00 | திரு.எஸ்.ஈஸ்வரன் | 0.01% குறைவு |
| | | | M/s.சீத்தாராமதாசன் அன் கோ | 1.80% அதிகம் |

வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள ஒப்பந்ததாரர்களுக்கு வேலை உத்தரவு வழங்கிட மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலகக்குறிப்பு</u>**

1).மன்றம் அனுமதி வழங்கலாம்.

2).மேற்படி பணிக்கு நகர்மன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று வேலை உத்தரவு வழங்கியதையும் மன்றம் ஏற்கலாம்.

(ந.க.எண். 338/2022/இ1)

**தீர்மானம் எண்.454**

**தீர்மானம் : அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

---

**<u>மன்றப்பொருள்–15</u>**

உசிலம்பட்டி நகராட்சியில் 2023–24–க்கான கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டுத்திட்டத்திற்கான திட்ட அனுமதி மற்றும் கண்காணிப்பு குழுவின் 19–வது கூட்ட நடவடிக்கைகளில் உசிலம்பட்டி நகராட்சியில் கீழ்க்கண்ட பகுதிகளில் அமைந்துள்ள சிப்பம்–1 மண் சாலைகளை சிமெண்ட் சாலையாக மாற்றியமைக்கும் பணியினை ரூ. 68.00/– இலட்ச மதிப்பீட்டிலும் சிப்பம்–2 மண் சாலைகளை தார் சாலைகளாக மாற்றியமைக்கும் பணியினை ரூ. 124.00 இலட்சம் மதிப்பீட்டில் மற்றும் சிப்பம்–3 மண் சாலைகளை தார் சாலைகளாக மாற்றியமைக்கம் பணியினை ரூ. 123.00 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ளவும் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மேற்படி பணிகள் மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

| Sl.No | Name of work | Unicode | Length | ESt.cost (Rs.in Lakhs) |
|---|---|---|---|---|
| | PACKAGE - I | | | |
| 1 | KALAITHEVAR WEST STREET-2 | 119001R018 | 100.00 | 68.00 |
| 2 | JOTHIMAHAL STREET | 119005R175 | 100.00 | |
| 3 | MALAIYANDI THEATRE 2nd STREET | 119008R189 | 185.00 | |
| 4 | MEENAMMAL NAGAR MAIN ROAD 1st STREET | 119022R223 | 190.00 | |
| 5 | PANDIKOVIL SOUTH 2nd STREET | 119007R241 | 300.00 | |
| 6 | PANDIKOVIL 3rd STREET | 119007R239 | 112.00 | |
| 7 | DURAISAMI THEVAR STREET | 119003R153 | 83.00 | |
| | **TOTAL** | | **1070.00** | **68.00** |

| Sl.No | Name of work | Unicode | Length | ESt.cost (Rs.in Lakhs) |
|---|---|---|---|---|
| | PACKAGE - II | | | |
| 1 | VILLANI SALAI 3RD STREET - CROSS STREET-2- | 119021R128 | 73.00 | 124.00 |
| 2 | VILLANI SALAI 3RD STREET - CROSS STREET-3- | 119021R129 | 83.00 | |
| 3 | VILLANISALAI 10th STREET- | 119021R130 | 220.00 | |
| 4 | OTHAPATTI SALAI 6th STREET- | 119020R122 | 31.00 | |
| 5 | VILLANI SALAI 3RD STREET - CROSS STREET-1- | 119021R127 | 117.50 | |
| 6 | VILLANISALAI 3rd STREET- | 119021R125 | 49.00 | |

| | | | | |
|---|---|---|---|---|
| 7 | PANDIKOVIL NORTH 1st STREET- | 119007R242 | 82.00 | |
| 8 | PANDIKOVIL NORTH 3rd STREET- | 119007R244 | 59.00 | |
| 9 | PANDIKOVIL SOUTH 3rd STREET | 119007R246 | 70.00 | |
| 10 | PANDIKOVIL NORTH 2nd STREET- | 119007R243 | 60.00 | |
| 11 | SATHYA NAGAR 7th STREET-CROSS STREET- | 119006R186 | 307.00 | |
| 12 | BAKKIYA NAGAR 12th STREET | 119016R166 | 380.00 | |
| 13 | NEW OFFICE BUILDING ROAD CROSS STREET | 119001R021 | 90.00 | |
| 14 | MAMARATHUPATTI MAIN ROAD | 119002R014 | 25.00 | |
| 15 | ANNA NAGAR 1st STREET | 119022R231 | 135.00 | |
| | TOTAL | | 1781.50 | **124.00** |
| | PACKAGE- III | | | |
| 1 | CHINNASAMY KOVIL 2nd STREET- | 119013R048 | 60.00 | |
| 2 | KEROSENE GODOWN 4th STREET- | 119001R030 | 180.00 | |
| 3 | S.P.VADIVEL STREET | 119013R036 | 60.00 | |
| 4 | KEROSENE GODOWN 6th STREET- | 119001R032 | 90.00 | |
| 5 | KEROSENE GODOWN 7th STREET | 119001R033 | 90.00 | |
| 6 | CHINNASAMY KOVIL 1st STREET- | 119013R047 | 70.00 | 123.00 |
| 7 | RAMATHEVAR 6th STREET | 119022R229 | 350.00 | |
| 8 | BAKKIYA NAGAR 10th STREET | 119016R150 | 200.00 | |
| 9 | BAKKIYA NAGAR 9th STREET | 119016R175 | 160.00 | |
| 10 | BAKKIYA NAGAR 11th STREET | 119016R176 | 200.00 | |
| 11 | BAKKIYA NAGAR 6th STREET | 119016R179 | 140.00 | |
| 12 | BAKKIYA NAGAR 5th STREET | 119016R165 | 180.00 | |
| | TOTAL | | **1780.00** | **123.00** |

<u>அலுவலகக்குறிப்பு</u>

1).மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

2).நகர்மன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று தொடர் நடவடிக்கை மேற்கொண்டதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

(ந.க.எண். 1060/2023/இ1)

**தீர்மானம் எண்.455**

**தீர்மானம் : அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

---

<u>மன்றப்பொருள்–16</u>

இந்நகராட்சி அலுவலகத்திற்கு 2023–2024–ஆம் ஆண்டுக்கு தேவையான ஆபீஸ் கவர் அளவு 12x5=5000, அளவு 9x4=5000, அளவு 6½ x4 Cover=5000 கொள்முதல்

செய்யப்பட்டது. அதற்கான பட்டியல் தொகை ரூ. 27,730/- A-2295 The Madurai Co-operative Printing works Ltd., அவர்களுக்கு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலகக்குறிப்பு</u>**

1). மன்றம் அனுமதி வழங்கலாம்.

2). அலுவலக தேவையின் அவசர அவசியம் கருதி செலவினம் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 957/2014/பி2)

**தீர்மானம் எண்.456**

**தீர்மானம் : அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

---

**<u>மன்றப்பொருள்-17</u>**

தூய்மை இந்தியா திட்டத்தின்கீழ் இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட வீடுகள் மற்றும் கழிப்பிடங்களில் நச்சுத்தொட்டி கழிவுகளை செப்டேஜ் மேலாண்மை விதிகளின்படி உரிய முறையில் அப்புறப்படுத்த இந்நகராட்சியில் FSTP இல்லாத காரணத்தினால் திருமங்கலம் மாநகராட்சிக்குச் சொந்தமான FSTP -இல் நச்சுத்தொட்டி கழிவுகளை அப்புறப்படுத்த இரு நகராட்சிகளிடையே புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. மேற்படி நச்சத்தொட்டி கழிவுகளை திருமங்கலம் நகராட்சிக்குச் சொந்தமான FSTP-இல் சுத்திகரிப்பு செய்ய ஆண்டு கட்டணத்தொகை ரூ. 184239.93/- செலுத்துமாறு ஆணையாளர், திருமங்கலம் நகராட்சி அவர்களின் கடிதம் ந.க.எண். 944/2023/அ2, நாள். 29.05.2023-இல் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேற்படி ஆண்டு கட்டணத்தொகை ரூ. 184239.93/- திருமங்கலம் நகராட்சிக்கு செலுத்த மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலகக்குறிப்பு</u>**

பொதுச்சுகாதார அவசர அவசியம் கருதி மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண். 228/2014/எச்.1)

**தீர்மானம் எண்.457**

**தீர்மானம் : அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

---

**<u>மன்றப்பொருள்-18</u>**

நகராட்சி நிர்வாக இயக்குநரகம், சென்னை அவர்களின் சுற்றறிக்கை கடிதம் அவர்களின் சுற்றறிக்கை கடிதம் ந.க.எண். 20383/2023/எச்.1, நாள். 12.06.2023-இல் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் நாய்களுக்கான கருத்தடை அறுவை சிகிச்சை மேற்கொண்டு நாய்கள் இனப்பெருக்கத்தினை கட்டுப்படுத்த நடவடிக்கை மேற்கொள்ள தெரிவிக்கப்பட்டுள்ளது. ஏற்கனவே நகர்மன்ற தீர்மான எண். 406, நாள். 28.04.2023-இல் உத்தேச செலவினத்தொகை ரூ. 143500/-க்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. தற்போது பரப்புரையாளர்கள் மற்றும் மேற்பார்வையாளர்கள் மூலம் தெரு நாய்களை கணக்கெடுக்கப்பட்டதில் கூடுதலாக தெரு நாய்கள் இருப்பதால் கூடுதல் செலவினம் ரூ.143000/-க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலகக்குறிப்பு</u>**

1).பொதுச்சுகாதார அவசர அவசியம் கருதி மன்றம் அனுமதி வழங்கலாம்.

2).நகர்மன்ற முன் அனுமதி பெற்று விலைப்புள்ளி கோரவும் மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 3156/2012/எச்.1)

**தீர்மானம் எண்.458**

**தீர்மானம் : அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

**<u>மன்றப்பொருள்-19</u>**

நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், மதுரை அவர்களின் கடிதம் ந.க.எண். 4313/2021/அ3, நாள். 17.05.2023-இன்படி 12.06.2023 அன்று தூய்மை நகரங்களுக்கான மக்கள் இயக்கம் தொடர்பாக "என் குப்பை என் பொறுப்பு" "பிளாக்ஸ்டிக் ஒழிப்பு" மற்றும் "டெங்கு கொசு புழு ஒழிப்பு" தொடர்பாக பொதுமக்களுக்கு விழிப்புணர்வு கலை நிகழ்ச்சிகள் இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டதற்கு ஒரு நிகழ்ச்சிக்கு ரூ.7500/- வீதம் இரண்டு கலை நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டதற்கு ரூ. 15,000/- வெங்கடாஜலபதி நாடக சபா, சென்னை அவர்களுக்கு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலகக்குறிப்பு</u>**

1). மன்றம் அனுமதி வழங்கலாம்.

2). மேற்படி செலவினத்தை SBM IEC நிதியிலிருந்து வழங்கலாம்.

(ந.க.எண். 1113/2022/எச்.1)

**தீர்மானம் எண்.459**

**தீர்மானம் : அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

---

**<u>மன்றப்பொருள்-20</u>**

திடக்கழிவு மேலாண்மை விதிகள் 2016-இன்படி நாள் ஒன்றிற்கு 100 கிலோவிற்கு மேல் குப்பை உற்பத்தி செய்பவர்கள் அல்லது 5000 சதுர அடிக்கு மேல் இடம் வைத்துள்ள கட்டிட உரிமையாளர்கள் Bulk Waste Generator என நகராட்சி அலுவலகத்தில் பதிவு செய்து அவர்கள் வளாகத்திலே கழிவுகளை மறு சுழற்சி செய்வது தொடர்பாக நாளிதழில் விளம்பரம் செய்ததற்கு ரூ. 26800/- தினசங்கு நாளிதழுக்கு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலகக்குறிப்பு</u>**

மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண். 1019/2023/எச்.1)

**தீர்மானம் எண்.460**

**தீர்மானம் : அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

---

**<u>மன்றப்பொருள்-21</u>**

இந்நகராட்சிக்குச் சொந்தமான பொதுச்சுகாதார பிரிவு LCV வாகன எண். TN-58 AS 3984-க்கு கிளட்ச் பிளேட் பழுதடைந்துள்ளதால், வாகனத்தை இயக்க முடியாத சூழ்நிலையில் பொதுச்சுகாதார அவசர அவசியம் கருதி கிளட்ச் பிளேட் பழுது நீக்கம் செய்ததற்கு உரிய செலவினத்தொகை ரூ. 6060/- வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலகக்குறிப்பு</u>**

பொதுச்சுகாதார அவசர அவசியம் கருதி மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண். 1285/2020/எச்.1)

**தீர்மானம் எண்.461**

**தீர்மானம் : அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

---

**<u>மன்றப்பொருள்-22</u>**

நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை கடிதம் ந.க.எண். 20383/2023/எச்.1, நாள். 12.06.2023-இன்படி இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியில்

சுற்றித்திரியும் தெருநாய்களை பிடித்து கருத்தடை அறுவை சிகிச்சை மற்றும் வெறிநாய்கடி தடுப்பூசி போட விலைப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற விலைப்புள்ளிகள் விபரம் கீழ்க்கண்டவாறு மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

1.M/s. Mass Trust, திருநெல்வேலி – ரூ. 1400/– (ஆண் / பெண் நாய் ஒன்றுக்கு)
2.M/s. Head Trust, தேனி – ரூ. 1450/– (ஆண் / பெண் நாய் ஒன்றுக்கு)

வரப்பெற்ற விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி அளித்த M/s. Mass Trust திருநெல்வேலி நிறுவனத்திற்கு வேலை உத்தரவு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு**

பொதுச்சுகாதார அவசர அவசியம் கருதி மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண். 3156/2012/எச்.1)

**தீர்மானம் எண்.462**

**தீர்மானம் : அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

---

**மன்றப்பொருள்–23**

இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட 01 முதல் 24 வார்டுகளில் RRR (Reduce, Reuse, Recycle) மையம் பற்றி பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்த கீழ்க்கண்ட விபரப்படி விழிப்புணர்வு விளம்பர நோட்டீஸ்கள், ஸ்டிக்கர்கள் மற்றும் சுவரொட்டிகள் அச்சிடவும் அதற்காகும் உத்தேச செலவினத்தொகை ரூ. 3,50,000/– மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

1).விழிப்புணர்வு அறிவிப்பு நோட்டீஸ் – 10000 எண்ணம்
2).விழிப்புணர்வு மல்டி கலர் நோட்டீஸ் – 10000 எண்ணம்
3).விழிப்புணர்வு மல்டி கலர் டோர் ஸ்டிக்கர்– 10000 எண்ணம்
4).விழிப்புணர்வு விளம்பர சுவரொட்டிகள் – 500 எண்ணம்

**அலுவலகக்குறிப்பு**

1).பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்துவதன் அவசர அவசியம் கருதி மன்றம் அனுமதி வழங்கலாம்.
2). மன்றத்தின் முன் அனுமதி பெற்று கூட்டுறவு நிறுவனத்திடம் விலைப்புள்ளி பெற்று வேலை உத்தரவு வழங்கவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண். 13440/2019/எச்.1)

**தீர்மானம் எண்.463**

**தீர்மானம் : அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

---

**மன்றப்பொருள்–24**

இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட 01 முதல் 24 வார்டுகளில் மனித கழிவுகளை மனிதனே அகற்றும் தடை சட்டம் 2013–இன்கீழ் பின்பற்ற கூடிய செயல்கள் குறித்தும், அதனுடையை பாதிப்புகள் குறித்தும் பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்த கீழ்க்கண்ட விபரப்படி விழிப்புணர்வு விளம்பர நோட்டீஸ்கள், ஸ்டிக்கர்கள் மற்றும் சுவரொட்டிகள் அச்சிடவும் அதற்காகும் உத்தேச செலவினத்தொகை ரூ. 2,95,000/– மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

1.விழிப்புணர்வு மல்டி கலர் நோட்டீஸ் – 10000 எண்ணம்
2.விழிப்புணர்வு மல்டி கலர் டோர் ஸ்டிக்கர் – 10000 எண்ணம்

**அலுவலகக்குறிப்பு**

1).பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்துவதன் அவசர அவசியம் கருதி மன்றம் அனுமதி வழங்கலாம்.

2). மன்றத்தின் முன் அனுமதி பெற்று கூட்டுறவு நிறுவனத்திடம் விலைப்புள்ளி பெற்று வேலை உத்தரவு வழங்கவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.
(ந.க.எண். 228/2014/எச்.1)

**தீர்மானம் எண்.464**

**தீர்மானம் : அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

---

<u>மன்றப்பொருள்–25</u>

இந்நகராட்சி 2022–2023 மற்றும் 2023–2024–ஆம் நிதி அண்டின் மே/2023 வரையிலான வருமான வரி பிடித்தங்களை உரிய கணக்குத்தலைப்பில் உரிய ஒப்பந்ததாரர் பெயரில் இணையவழியில் 2691, 2692, 2693, 2694 பதிவேற்றம் செய்தமைக்கு உரிய கட்டணம் ரூ. 10,000/– (ரூபாய் பத்தாயிரம் மட்டும்) RIFA TAX Consultancy நிறுவனத்திற்கு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலகக்குறிப்பு</u>

1).மன்றம் அனுமதி வழங்கலாம்.
2). வரி பிடித்தங்கள் உரிய நேரத்தில் செலுத்த வேண்டியதன் அவசரம் கருதி நகர்மன்ற தலைவர் முன் அனுமதி பெற்று தொகை வழங்கியதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.
(ந.க.எண். 602/2017/பி1)

**தீர்மானம் எண்.465**

**தீர்மானம் : அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

---

<u>மன்றப்பொருள்–26</u>

நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், மதுரை அவர்களின் கடிதம் ந.க.எண். 2896/2017/அ3, நாள். 21.06.2023–இன்படி தூய்மை இந்தியா இயக்கம் ODF++ மதிப்பீடு தொடர்பாக இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பொதுக்கழிப்பிடம் மற்றும் சமுதாய கழிப்பிடத்தில் Incenerator–3 எண்ணம் மற்றும் Vending Machine–3 எண்ணம் கொள்முதல் செய்யவும், அதற்காகும் உத்தேச செலவினத்தொகை ரூ. 1,50,000/–த்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலகக்குறிப்பு</u>

மன்றம் அனுமதி வழங்கலாம்.
(ந.க.எண். 1262/2017/எச்.1)

**தீர்மானம் எண்.466**

**தீர்மானம் : அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

---

<u>மன்றப்பொருள்–27</u>

இந்நகராட்சி பொதுச்சுகாதார பிரிவு LCV வாகன எண். TN 58 AS 3951–ற்கு தகுதிச்சான்று 30.06.2023 உடன் முடிவடைவதால் மேற்படி வாகனத்திற்கு தகுதிச்சான்று புதுப்பிக்கவும், மற்றும் பழுது பணிகள் மேற்கொள்ளவும் அதற்காகும் உத்தேச செலவினத்தொகை ரூ. 74128/–ற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலகக்குறிப்பு</u>

மன்றம் அனுமதி வழங்கலாம்.
(ந.க.எண். 924/2017/எச்.1)

**தீர்மானம் எண்.467**

**தீர்மானம் : அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

---

<u>மன்றப்பொருள்–28</u>

இந்நகராட்சி பொதுச்சுகாதார பிரிவு LCV வாகன எண். TN 58 AS 3893–ற்கு தகுதிச்சான்று 30.06.2023 உடன் முடிவடைவதால் மேற்படி வாகனத்திற்கு தகுதிச்சான்று புதுப்பிக்கவும், மற்றும் பழுது பணிகள் மேற்கொள்ளவும் அதற்காகும் உத்தேச செலவினத்தொகை ரூ. 72727/–ற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலகக்குறிப்பு</u>

மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண். 922/2020/எச்.1)

**தீர்மானம் எண்.468**

**தீர்மானம் : அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

நகர்மன்ற தலைவர்,
உசிலம்பட்டி நகராட்சி.